



## வரையாட்டின் உடலமைப்பு




நிற்கும் நிலையில் தோள் வரை உயரம் 65-100 செ.மீ
நிற்கும் நிலையில் உயரம் 67-104 செ.மீ
உடலின் நீளம் 90-140 செ.மீ
எடை 50-100 கிலோ
கொம்பின் நீளம் : 44.5 செ.மீ பெண் : 35.6 செ.மீ
ஆண் வரையாட்டின் எடை பெண்வரையாட்டின் எடையை விட தோராயமாக இருமடங்கு அதிகமாக இருக்கும்.
பெண் வரையாட்டிற்கு இரு காம்புகள் மட்டுமே உண்டு
இனப்பெருக்க காலம் : தென்மேற்குப் பருவமழைக் காலம் (ஜூன் முதல் ஆகஸ்ட்)
சூல்கொள்ளல் காலம் : 180 நாட்கள்
பேறுகாலம் : ஜனவரி முதல் மார்ச்
பெண் வரையாடு ஒன்று அல்லது அரிதாக இரண்டு குட்டிகளை ஈனும்
ஆயுட்காலம் : காட்டில் சராசரியாக 9 முதல் 12 ஆண்டுகள்
வளர்ப்பு நிலையில் 20 ஆண்டுகள்



## நீலகிரி வரையாடு திட்டத்தின் நோக்கங்கள்

- வரையாடுகளின் வாழ்விடங்கள் மற்றும் எண்ணிக்கையைக் கணக்கெடுத்தல்.
- வரையாடுகளுக்கு ரேடியோ காலரிங் பொருத்திக் கண்காணித்தல்.
- முந்தைய வாழ்விடங்களில் மீள் அறிமுகம் செய்து அதனை கண்காணித்தல்.
- நோய் பாதிக்கப்பட்ட வரையாடுகளுக்கு நோயிற்கான காரணிகளை கண்டறிந்து அவற்றிற்கு சிகிச்சை அளித்தல்.
- சோலைப் புல்வெளிகளை மீட்டெடுத்தல்.
- சூழல் சுற்றுலாவை செயல்படுத்துதல்.
- வனப்பணியாளர்களுக்கு வரையாடுகளின் கணக்கெடுப்பு பற்றிய பயிற்சி அளித்தல்.
- வனப்பணியாளர்களுக்கு தேவையான உபகரணங்களை வழங்குதல்.
- பொதுமக்களுக்கும், மாணாக்கர்களுக்கும் வரையாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

### நீலகிரி வரையாட்டின் உயிர்த்தொகை அதிகளவில் காணப்படும் இடங்கள்




வடிவமைப்பு :

**என். செந்தில் குமரன்**

TAMILNADU FOREST DEPARTMENT
PROJECT NILGIRI TAHR

தமிழ்நாடு வனத்துறை

# நீலகிரி வரையாடு பாதுகாப்புத் திட்டம்

தமிழ்நாட்டின் மாநில விலங்கு வரையாடு



நீலகிரி

# வரையாடு

## பாதுகாப்புத் திட்டம்

தமிழ்நாட்டின் மாநில விலங்கு வரையாடு

## உயிரியல் வகைப்பாடு

| | | |
|---|---|---|
| திணை | : | விலங்கினம் |
| தொகுதி | : | முதுகுநாணி |
| வகுப்பு | : | பாலூட்டி |
| வரிசை | : | இரட்டைப்படை குளம்பி |
| குடும்பம் | : | போவிடே |
| துணை குடும்பம் | : | கேப்ரினே |
| பேரினம் | : | நீல்கிரிடிராகஸ் |
| இனம் | : | ஹைலோகிரியஸ் |




## வாழ்விடங்கள்

நீலகிரி மலைத்தொடர்கள், ஆனைமலைத்தொடர்கள்,
பழனி மலைத்தொடர்கள், ஸ்ரீ வில்லிப்புத்தூர், தேனி, மேகமலை, களக்காடு,
முண்டந்துறை புலிகள் காப்பகப் பகுதிகள் மற்றும் அசம்பு மலைத்தொடர்கள்

## சங்ககால இலக்கியங்களில் வரையாடு

தொல்சமூகப் பண்பாட்டின் இலக்கியங்களுக்கான இலக்கண நூல் தொல்காப்பியம் "சேயோன் மேய மைவரை உலகமும்" (தொல் : அகத்திணை 5) என்கின்றது. இந்த நூற்பாவில் வரை என்பது மலை, மலை உச்சி, எல்லை எனப் பொருள்படுகின்றது.

2000 ஆண்டுகளுக்கு முன்பு சங்ககால இலக்கியங்களில் வரையாடுகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஐம்பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி மற்றும் நற்றிணையில் வரையாடு, அதன் வாழ்விடம் பற்றிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

வரையாடு வருடையும் மடமான் மறியும் (சிலம்பு, வஞ்சி, காட்சிக் காதை : 51)

ஓங்கு மால்வரை வரையாடு உழக்கலின் உடைந்துகு பெருந்தேன் (சீவக. 15591)

பல் மலர்க் கான் யாற்று உம்பர், கருங் கலை
கடும்பு ஆட்டு வருடையொடு தாவன உகளும் (நற்றிணை -119)



நீலகிரி வரையாடு தமிழ்நாட்டின் மாநில விலங்காகும். மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதிகளில் மட்டும்தான் மிக அருகிய இனமான வரையாடுகள் வாழ்கின்றன. வரையாடுகள் 'மலை மன்னர்கள்' என்றும் அழைக்கப்படுகிறது. IUCN-இன் சிகப்புப் பட்டியலில் அருகிய இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. வரையாடு ஆண், பெண், குட்டி மற்றும் பருவமடைந்த வரையாடு என கூட்டமாகக் கலந்து காணப்படுகின்றன.

கடல் மட்டத்திலிருந்து 1200 மீட்டர் உயரமுள்ள மலையில் உள்ள புல்வெளிகள், திறந்த சோலைப்புல்வெளிகள், மலைமுகடுகளை மட்டுமே வாழ்விடமாகக் கொண்டுள்ளது. புற்கள், இலைகள் மற்றும் குறுஞ்செடிகளை உணவாக உட்கொள்கிறது.

ஆண் வரையாடு பெண் வரையாட்டை விட உருவத்தில் பெரியதாகவும் மற்றும் நீளமான கொம்புகளை உடையது. முற்றிலும் வளர்ந்த ஆண் வரையாடு 100 கிகி எடையும் பெண் வரையாடு ஆணின் எடையில் பாதியாக 50 - 70 கிகி எடையும் கொண்டுள்ளது.

இரண்டு பாலினமும் வளைந்தக் கொம்புகளை உடையது. ஆண் வரையாட்டின் கொம்பு 40 செ.மீ நீளமும், பெண் வரையாட்டின் கொம்பு 30 செ.மீ நீளமும் உடையதாகும். பருவமடைந்த ஆண்வரையாடு இளம் பழுப்பு நிறத்திலும் மற்றும் முதுகுப்புறத்தில் வெளிர் நிறத்துடனும் காணப்படுகிறது. இவைகள் 'வெளிர்சேனை' '(சேடில் பேக்)' என்று அழைக்கப்படுகின்றன.

ஆண் வரையாடு 100 செ.மீ மற்றும் பெண் வரையாடு 80 செ.மீ உயரம் வரை வளர்கிறது.



## அச்சுறுத்தல்கள்

- மனிதன் உணவுக்காக வரையாட்டை வேட்டையாடுதல்.
- இவற்றின் இயற்கையான வாழ்விடங்களை (புல்வெளிகளை) மனிதனின் தேவைக்காக (தேயிலை தோட்டம், விவசாய நிலம், ஓரின மரத்தோட்டம்) மாற்றி அமைத்தல்.
- காட்டுத் தீ
- மலைப் பகுதிகளில் கால்நடைகள் மேய்ச்சலினால் வனவிலங்குகளுக்குத் தொற்றுவியாதிகள் பரவும் அபாயங்கள்
- அணைகள், மின்உற்பத்தி நிலையங்கள் மற்றும் வனத்தின் இடையே சாலைகள் அமைத்தல்
- செந்நாய், சிறுத்தை மற்றும் புலி போன்ற ஊன்உண்ணிகளால் வேட்டையாடப்படுதல்





